1983 மார்ச் 7]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தை தமிழகம் முழுவதும் அமுல்படுத்துவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கட்டமாக மொத்தம் 42 வட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. படிப் படியாக இந்தத் திட்டம் மேலும் பல பகுதிகளுக்கு விரிவாக்கப் படும்.

இ. எஸ். ஐ. திட்டத்தை விஸ்தரிக்கும் திட்டம்.

* வினா எண் 306—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி புறநகர்களுக்கு இ. எஸ். ஐ. திட்டத்தை நீட்டிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா—

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

(இ) எப்பொழுது செயல்படும் ?

(ஈ) எவ்வளவு பேர்கள் பயன் அடைவார்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி புறநகர் பகுதிக்கு ஈட்டுறுதி திட்டத்தை நீட்டித்து அங்குள்ள தொழிலாளர்களை நாகர்கோயிலில் ஏற்கனவே இயங்கிவரும் இ. எஸ். ஐ. மருந்தகத்தோடு இணைத்து அவர்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக 5–8–1981 ஆம் நாள் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(இ) இத் திட்டம் 25–4–1982 முதல் செயல்பட்டு வருகின்றது.

(ஈ) சுமார் 653 தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் பயன் அடைவார்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி புறநகர் பகுதிக்கு இத்திட்டத்தை அமுல் நடத்துவது போன்று, இதன் பக்கத்தில் இருக்கக் கூடிய, வேறுசில தொழிலாளர்கள் இருக்கக்கூடிய பகுதிகளையும் இந்த திட்டத்தின்கீழ் கொண்டு வர, குறிப்பாக தக்கலை, மேட்டுக்கலை போன்ற இடங்களிலுள்ள தொழிலாளர்களையும், இதன்கீழ் கொண்டு வர அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிப்படியாக கவனிக்கலாம்.

* வினா எண் 307—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இ.எஸ்.ஐ. திட்டம் 1982 ஆம் வருடத்தில் எந்தெந்த பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படும் ?

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தின் எந்தெந்த பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இ.எஸ்.ஐ. திட்டத்தை கீழ்க்கண்ட பகுதிகளுக்கு விஸ்தரித்து அரசு ஆணைகள் வெளியிடப்பட்டன :—

(1) திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டம்.

(2) மானாமதுரை, இராமநாதபுரம் மாவட்டம்.

(3) வீரவநல்லூர், திருநெல்வேலி மாவட்டம்.

(4) உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.

(5) அரியூர், வட ஆற்காடு மாவட்டம்.

(6) செங்குன்றம், செங்கல்பட்டு மாவட்டம்.

(7) ஓசூர், தர்மபுரி மாவட்டம்.

வட ஆற்காடு மாவட்டத்தில் வாலாஜா பகுதிக்கு இத்திட்டத்தை நீட்டிக்கும் ஆணை விரைவில் வெளியிடப்படும்.

(ஆ) கன்னியாகுமரி புறநகர் பகுதிக்கு ஈட்டுறுதி திட்டம் விரிவு படுத்தப்பட்டு 25—4—1982 முதல் செயல்பட்டு வருகின்றது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏழத்தாழ 25,000-க்கும் அதிகமான முந்திரித் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதேபோல் கயிறு தொழிலிலே ஈடுபட்டிருக்கக்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS